ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# சடகோப நாமப்பதிகம்.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோல்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

91

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 1--18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோன்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கியார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) சேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.


தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோன்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



# சடகோபநாமப்பதிகம்.

பூதலந்தன்னில்வந் திந்நாள்வரைக்குமுன் பொற்
பாதமதைநினைந்து, பூஜிக்கவேபக்த ரோடன்பதாகநின்
புகழதை யெடுத்துநேரில், யாதவகுலத்துதித் தையனே
தசரதற் கருமைமகனே அப்பனே, யானைமுறையிடஓடி
வந்தபொருளேஉண்மை யாதிமுதலானவரசே, மாதவத்
தோர்முனிவ ரனைவர்கொண்டாடுமா வைகுந்தபதியே
யேயென, மனமகிழ்ந்தேதொழும் சிறியனெனையெங்கு
வந்தாயென்னவகைவிபரமாய், ஏதுகுறையுன்றன்முறை
யென்றுநீகேளா திருத்தல்நீதியோதர்மமோ, இதுசமயம்
வந்துகாத் தருள்செய்ஜெகதீசனே எளியனுன் சடகோ
பனே. (க)

என்னிருகண் மணியான மாசற்ற செல்வமே எம் பிரானுனமுதலே, எளியேனை யாண்டகுல தெய்வமே அருமறைக் கெட்டாத வெட்டவெளியே, தன்னிகரிலா யேக சக்ரரூபதியே தனித்தகட் டிக்கரும்பே, தசரத குமாரனென வந்தமாமழையே ஜானகிமணந்த மலரே, கன்னியர்க ளானபா ழாசையிற் சிக்கிக் கசிந்துநான் மெலியாமலும், காலனூர் தூதரென் னிடமே வராமலுங் கருணைநீ செய்வாயென, வன்னலுற வேண்டினேன் மாசிலாமணியான வானவர்கள் பணிதலைவனே, வரமெனக் குளதெலாந் தந்தருள் வைகுந்தனே மைந்தனுன் சடகோபனே. (உ)

நாராய ணுவாசு தேவரெங் கேசஸ்ரீ ராமா நிறைந்த சீமா, ரட்சகா உன்னைநா னம்பினேன் யின்பமுடன் நரஹரி ஜெமாதவா, சீராக நின்னன்பர் நாரதப் பிரமாதி தேவரிஷி முனிவோர்களும், சேர்ந்துகும் பாகவே கடலோசைபோலச் சிறந்திடு மனந்தவேத, பாராயணஞ் செய்தே இணையடிக் கமலமதில் பலபுஷ்ப வகைசொரிந்து, பத்ரகிரி வாழ்தாச ரதியே ஓகருணு பயோநிதியென் றிறைஞ்சும், பேரான பரமபத வீட்டினி லிருந்து

னைப் பிரியமுட னேதுதிக்கப், பிழையெனக் குளதெலா
ம் நீக்கியாளையனே பிள்ளைநான் சடகோபனே. (ரு)

என்பிழை யெலாம்பொறுத் தின்பதவி யானபே
ரின்பவீ டதையருளவே, ஏதுகுறை கோதுகளென்
மீதிருந் தாலுமதை எண்ணமதில் வைத்திடாமல், அன்
பது பெருக்கிரா ஜாதிபதி யேயுன்ற னருமையிரு சேவ
டியிலென், ஆழாழி யானவிப் பாழ்மனதை யெங்குமே
அசையாம லானந்தமாய்த், துன்பமற வேதுளசி கோ
டானுகோடிகள் சொரிந்துனது மனமகிழவே, தோத்த
ரித் தேயானும் நிற்கும்ப டிக்குனது தொண்டரிற் றொ
ண்டனாக, இன்பமுட னேயெனைக் காப்பதென் னுளந்த
நாளிந்த நாளென்னவே, இவ்வேளை வந்தருள்செய் சீதா
சமேதனே எளியனுன் சடகோபனே (௬)

வானவர்க் கிடர்செய்த யீனராவணனுயிரை வான
கஞ் சேர்ந்ததுரையே, மடுவினில் அகப்பட்டு வதைபடு
ங்கரியைநீ வந்தாத ரித்ததுரையே, கானகந் தனில்மான
தானமா ரீசனைக் கண்டித்து நின்றதுரையே, கதிரவனை
நின்சக் கரத்தால் மறைந்துக் கறுத்திடச் செய்ததுரை
யே, மானமழி யாதபடி துரோபதைக் குத்துகிலை வளர்
வித்த ராஜதுரையே, வன்னெஞ்ச ரானதுரி யோதனுநிப

ர்களை மாண்டிடச் செய்ததுரையே, ஜானகிக் கின்பமண வாளனே யென்கொடிய சஞ்சலங் களைநீக்குவாய், சர்வ லோ காதிபர்கள் பணிபரந்தாமனே தமியனுன் சடகோ பனே. (ரு)

மலையையோர் விரலாற் சுமந்துமுன் னுயர்கள் மன க்குறை தவிர்த்த துரையே, வஞ்சனுங் கஞ்சனுட சிர சைப் பிளந்துயிரை மாளவே செய்ததுரையே, அலைவா ய்த் திரும்புபோ லென்மனங் குலையாம லாதரித் தருள் செய்துரையே, அஞ்சாதே யென்றனக் குறுதிமொழி நீதருவ தருமையோ தருமதுரையே, நிலையான நல்வர மெனக்களித் தன்பதாய் ரெட்சிநா னேழை துரையே, நீதிதவறாதார ஜாதிபதி கருணைபுரி ரெகுநாத னுனதுரை யே, தலைமேற் கரங்குவித் துனைநம்பி னேன்கொடியசஞ் சலங்களை நீக்குவாய், சர்வலோ காதிபர்கள் பணிபரந் தாமனே தமியனுன் சடகோபனே. (சு)

தர்மநெறி யாகவே ஜெகமெலா மோர்குடைத் தனி யனு யாள்பவனும்நீ, சட்டமொடு வெண்ணைதயிர் பால் களைத் திருடியே தானுக உண்டவனும்நீ, நிர்மலமதாகிய கொடுந்தவசி நானென்று நேர்பேர் படைத்தவனும்நீ, நித்திய முதற்படுக் காளியா யாயரொடு நின்றுவிளை யா

ண்டவனும்நீ, சொர்ப்பனத் தினிலுமற வாமலே ஐவருட துன்பமகல் வித்தவனும்நீ, சுத்தவான் போலநய வஞ்சகம் பேசிதுரி யோதனனை வென்றவனும்நீ, தற்பராசத்தியம தாய்நம்பி னேன்கொடிய சஞ்சலங்களை நீக்குவாய், சர்வலோ காதிபர்கள் பணிபரந்தாமனே தமியனன் சடகோபனே. (எ)

ஜெகமென்ற காணிக்கு வந்தமா ணிக்கமே திவ்யரசமே அமுதமே, தெவிட்டாத ஆனந்த பரவசக்கடலே சிறந்தவே தாந்தவடிவே, அகமீறி யேவந்த ராவணனை வேறோ டறுத்துமப் பாலெறிந்த, ஆதிநா ராயணச் செல்வமே சுத்தமா மதிமதுர ராஜதுரையே, சுகமான நல்வழிக் காளாக்கு மென்றனைத் துன்பத்தி லாழ்த்திடாமல், சொர்க்காதி புவனவீ டடையவே அடியவன் துயரெலாம் நீக்கியருள்வாய், மகமேரு கிரிபதிப ணயனமரர் முதல்வர்கள் மகிழ்ந்தாடு பவநேசனே, மந்திர துரந்தர நிரந்தர சுகந்தர மைந்தனுன் சடகோபனே. (அ)

சிறியேன்செய் பிழையெலாம் நீபொறுத்தேயுனது சிந்தையின் மகிழ்ச்சி கூர்ந்து, தேவரக சியமான ஆனந்தபரவசத் திருநாம மந்திரத்தைப், பிரியமுட னேயெனக் கோதவே காந்தமாய்ப் பெரியதிரு வடியேறிவா, பேரி

ன்ப வாசமது தந்துநல் வழியுடைப் பெரியோ ருடன் கூடியான், அரியே ஓகோதாச ரதியேவை குந்தஅதி பதியேயா ரோக்யமாக, ஆழ்கடலி லேஆதி சேஷசய னமதாயமர்ந்திடும் ஜெகதீசனே, சரியா யுனைத்துதித் தேயெந்தன் மனமுநின் சரணார விந்தமதனிற், றன்மையுட னேயிருக் கச்செய்யென் னையனே தமியனுன் சடகோபனே.

எத்தனை விதங்களாய்க் கூவியான் முறைசெய்வே என்னிரு தயத்தமர்ந்த, எனதுகுல தெய்வமே ஞானசஞ்சீவியே எட்டாத பேரின்பமே, சுத்தநிர்ம் மலமான தேவதே வாதியே ஜோதிநவ ரதனமணியே, சொல்லரிய வானந்த பரவசக் கடலெனுந் துரைராஜ சிம்மேருவே, குற்றமெவ் வளவுநான் செய்தாலு முன்மனது குளிரவே யாள்வா யெனக், கோடிசர ணங்கள்செய் தன்புடன் துதிசெய்தேன் குன்றதைக் குடைகொண்டவா, சித்தரொடு பித்தர்முதல் நித்தமுந் துதிசெய்ய சீதாபிராட்டி மகிழும், செல்வரெங் கேசனே ஓமந்த காசனே சிறியனுன் சடகோபனே. (௧0)

சடகோபநாமப்பதிகம்

முற்றிற்று.